## தமிழக வரைவு வாக்காளர் பட்டியலில் 6.11 கோடி பேர்; ஆண்களைவிட பெண்கள் 9.85 லட்சம் பேர் அதிகம்

**சென்னை:** தமிழக வரைவு வாக்காளர் பட்டியலை மாநில தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு வெளியிட்டுள்ளார். அதன்படி, தமிழகத்தில் மொத்தம் 6.11 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்களைவிட, பெண் வாக்காளர்கள் 9.85 லட்சம் பேர் அதிகம் உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, 2024 ஜன.1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி தமிழகத்தில் நேற்று தொடங்கியது. இதையொட்டி, சென்னை தலைமைச் செயலகத்தில் மாநில வரைவு வாக்காளர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு நேற்று வெளியிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தற்போது வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலின்படி, தமிழகத்தில் 3 கோடியே 68 ஆயிரத்து 610 ஆண்கள், 3 கோடியே 10 லட்சத்து 54 ஆயிரத்து 571 பெண்கள், 8,016 மூன்றாம் பாலினத்தினர் என மொத்தம் 6 கோடியே 11 லட்சத்து 31 ஆயிரத்து 197 வாக்காளர்கள் உள்ளனர். கடந்த 2023 ஜனவரியில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 6 கோடியே 20 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர். உயிரிழந்தவர்களின் பெயர், இரட்டை பதிவுகள் ஆகியவை கண்டறிந்து நீக்கப்பட்டதில், தற்போது 9 லட்சம் வாக்காளர்கள் குறைந்துள்ளனர்.

அதிகபட்சமாக செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதியில் 6 லட்சத்து 52 ஆயிரத்து 65 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தொகுதியில் 1 லட்சத்து 69 ஆயிரத்து 30 வாக்காளர்களும் உள்ளனர். 18-19 வயதில் 3 லட்சத்து 94 ஆயிரத்து 909 பேர் உள்ளனர். அதிகபட்சமாக 40-49 வயதினர் 1 கோடியே 37 லட்சம் பேர் உள்ளனர். வாக்காளர் அட்டையுடன்

ஆதார் எண்ணை இணைக்க இதுவரை 4 கோடியே 23 லட்சம் பேரின் ஆதார் எண்கள் சேகரிக்கப்பட்டுள்ளன

## சங்கல்ப யத்திரை: மத்திய அரசின் நாடு தழுவிய மாபெரும் மக்கள் தொடர்பு இயக்கம் நவ.15-ல் தொடக்கம்



**புதுடெல்லி:** மத்திய அரசின் நாடு தழுவிய மாபெரும் மக்கள் தொடர்பு இயக்கமான வளர்ந்த இந்தியாவுக்கான சங்கல்ப யத்திரை வரும் நவம்பர் 15-ம் தேதி தொடங்கும் என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கில் பிரச்சாரப் பயணத்தை மத்திய தகவல் மற்றும் ஒலிரப்புத் துறை திட்டமிட்டுள்ளது. இது குறித்து அத்துறையின் செயலர் அபூர்வ சந்திரா கூறியதாவது: "நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மத்திய அரசின் மக்கள் நல திட்டங்களை கொண்டு செல்லும் நோக்கில் வளர்ந்த இந்தியாவுக்கான சங்கல்ப யாத்திரை வரும் நவம்பர் 15-ம் தேதி தொடங்குகிறது. தீபாவளி

பண்டிகையை அடுத்து இந்த யாத்திரை தொடங்கும். இதற்காக தகவல் தொடர்பு வசதிகள் நிறைந்த 2,700-க்கும் மேற்பட்ட வேன்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

இந்த வேன்கள் ரதம் வடிவில் இருக்கும். தகவல், கல்வி, தொடர்பு ஆகிய அம்சங்களை மையமாகக் கொண்ட இந்த வேன்களில், நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் இருக்கும். வைஃபை, திரைகள், ஒலிபெருக்கிகள், நேரலையில் கலந்துரையாடும் வசதி உள்ளிட்டவை இதில் அடங்கும். இந்த திரையில் தோன்றி மக்களின் சில கேள்விகளுக்கு பிரதமர் மோடி பதில் அளிப்பார்.

இந்த யாத்திரை, பழங்குடியின தலைவர் பிர்சா முண்டாவின் பிறந்த நாளை முன்னிட்டு தொடங்க உள்ளது. முதலில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இந்த வேன்கள் செல்லும். 2.5 லட்சம் கிராம பஞ்சாயத்துகள், 3,700 நகராட்சிகளை இணைக்கும் வகையில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களுக்கு இந்த வேன்கள் செல்லும். வீடியோ மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், சிறிய புத்தகங்கள் மூலமாகவும் இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

மத்திய அரசின் 20 மக்கள் நலத் திட்டங்கள் குறித்து மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் இந்த பிரச்சாரம் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக, விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் கொடுக்கும் திட்டம், வீடு தோறும் குடிநீர் இணைப்பு திட்டம், பிரதமரின் வீடு கட்டும் திட்டம், விவசாயிகளுக்கான கிரிடிட் கார்டு திட்டம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை பரவலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் இந்த யாத்திரை செல்லும். இதற்கு மத்திய அரசு சார்பில் ஒரு பொறுப்பு அதிகாரி இருப்பார். அவர் மாநில அதிகாரிகளோடு இணைந்து இந்த பிரச்சார பயணத்தை ஒருங்கிணைப்பார். மத்திய அரசின் திட்டங்களால் பயனடைந்த மக்களைச் சந்திப்பதோடு, பயன் பெறாத

மக்களையும் இந்த யாத்திரை சென்று சேரும். சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள தெலங்கானா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் இந்த பிரச்சார யாத்திரை இப்போது தொடங்கப்படாது. தேர்தல் முடிந்த பிறகே இந்த மாநிலங்களில் யாத்திரை தொடங்கும்" என்று அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

## செமிகண்டக்டர் விநியோகம் | இந்தியா-ஜப்பான் இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி:** ஜப்பான்-இந்தியா செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலி கூட்டாண்மை குறித்த இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் ஜப்பானின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இடையே ஜப்பான்-இந்தியா செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலி கூட்டாண்மை குறித்து ஜூலை 2023 இல் கையெழுத்திடப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தொழில்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்துக்கு செமிகண்டக்டரின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலியை மேம்படுத்துவதில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் விரும்புகிறது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினரும் கையொப்பமிட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

ஜி 2 ஜி மற்றும் பி 2 பி இருதரப்பு ஒத்துழைப்பு இரண்டும் நெகிழ்வான செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலியை மேம்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் மேம்பட்ட ஒத்துழைப்பை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பின்னணி:** மின்னணு உற்பத்திக்கு உகந்த சூழலை உருவாக்க மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் ஒரு வலுவான மற்றும் நிலையான செமிகண்டக்டர் மற்றும் டிஜிட்டல் திரை சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை உறுதி செய்யும் நோக்கில் இந்தியாவில் செமிகண்டக்டர் மற்றும் டிஜிட்டல் திரை உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

செமிகண்டக்டர் உற்பத்தியில் பல்வேறு வசதிகளை நிறுவுவதற்கான நிதி ஆதரவை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், டிஜிட்டல் இந்தியா கழகத்தின் கீழ் இந்தியாவில் செமிகண்டக்டர் மற்றும் டிஜிட்டல் திரை உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான இந்தியாவின் உத்திகளை இயக்குவதற்காக இந்தியா செமிகண்டக்டர் இயக்கம் நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஜப்பானுக்கும் இந்திய நிறுவனங்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பரஸ்பர நன்மை பயக்கும் செமிகண்டக்டர் தொடர்பான வணிக வாய்ப்புகள் மற்றும் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான கூட்டாண்மையை நோக்கிய மற்றொரு படியாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் நிரப்புதல்களைக் கருத்தில் கொண்டு, "டிஜிட்டல் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களில்" அதிக கவனம் செலுத்தி, 2018 அக்டோபரில் பிரதமர் மோடியின் ஜப்பான் பயணத்தின் போது "இந்தியா-ஜப்பான் டிஜிட்டல் கூட்டாண்மை" தொடங்கப்பட்டது. நடந்து வரும் ஐஜேடிபி மற்றும் இந்தியா-ஜப்பான் தொழில்துறை போட்டித்திறன் கூட்டாண்மை (ஐ.ஜே.ஐ.சி.பி) ஆகியவற்றின் அடிப்படையில், ஜப்பான்-இந்தியா செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலி கூட்டாண்மை குறித்த இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மின்னணு சுற்றுச்சூழல் துறையில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும். தொழில்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்திற்கு செமிகண்டக்டரின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செமிகண்டக்டர் விநியோகச் சங்கிலி மீள்திறனை மேம்படுத்த உதவும்.

## ஒரே மாதத்தில் 1,198 பேருக்கு டெங்கு பாதிப்பு: நோய் தடுப்பு பணிகளை தீவிரப்படுத்த நடவடிக்கை



**சென்னை:** தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துவருகிறது. இதனால், கொசுக்கள்மற்றும் பருவகால மாற்றத்தின் மூலம் பரவும் நோய்கள்

அதிகரித்துள்ளன. குறிப்பாக, டெங்கு காய்ச்சலால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகம் முழுவதும் இந்த மாதத்தில் மட்டும் 1,198 பேருக்கு டெங்கு பாதிப்புஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில்டெங்குவால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால், இன்னும் 2 மாதங்களுக்கு ஏடிஸ் எஜிப்டை வகை கொசுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகி டெங்குவை பரப்பும் வாய்ப்புள்ளதால், நோய்ப் பரவலைத் தடுக்க சுகாதாரத்துறை தீவிரநடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதொடர்பாக தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் கூறியதாவது: தமிழகம் முழுவதும் நடப்பாண்டில் 5,772 பேருக்கு டெங்கு காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது மருத்துவமனைகளில் 553 பேர் சிகிச்சையில் உள்ளனர். தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கொசு ஒழிப்பு பணிகளில் 26,500 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் ஊராட்சிக்கு ஒருசுகாதார அலுவலரும், நகர்ப்புறங்களில் வார்டுக்கு ஒரு சுகாதார அலுவலரும், மாநகராட்சிகளில் தெருக்களின் அடிப்படையில் சுகாதார அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, மருத்துவக் கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் மருத்துவக் கண்காணிப்பை தீவிரப்படுத்த சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எத்தகைய சூழலையும் எதிர்கொண்டு சிகிச்சைஅளிக்கும் வகையில் மருத்துவமனைகளில் டெங்கு

வார்டுகளையும், படுக்கைககளையும் அமைத்து போதிய மருத்துவவசதிகளை தயார் நிலையில் வைத்திருக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ரத்த வங்கிகளையும் தயார் நிலையில் வைத்திருக்கவும், அவசர கால சூழல்களை சமாளிக்கும் வகையில் விரைவு உதவிக் குழுக்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

## 7-வது தேசிய விளையாட்டு போட்டியை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி: வாள்வீச்சில் பவானி தேவி தங்கம் வென்று அசத்தல்




**பனாஜி:** 37-வது தேசிய விளையாட்டு போட்டியில் மகளிருக்கான வாள் வீச்சில் தமிழகத்தின் சி.ஏ.பவானி தேவி தங்கப் பதக்கம் வென்றார்.

37-வது தேசிய விளையாட்டு போட்டி நேற்று கோவாவில் தொடங்கியது. கோவாவில் உள்ள ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு போட்டியை முறைப்படி

தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கோவா மாநில முதல்வர் பிரமோத்சாவந்த், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர்அனுராக் தாக்குர், இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர்பி.டி.உஷா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தொடக்க விழா நிகழ்ச்சியில் கண்கவர்கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.போட்டியில் கலந்துகொண்டுள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங் களின் அணி வகுப்பு நடைபெற்றது.

தொடர்ந்து ராட்சத பலூனில் பறந்து வந்தபடி வீராங்கனை ஒருவர் போட்டிக்கான ஜோதியை இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத்சிங், அலைச்சறுக்கு வீராங்கனை காத்யா கொய்லோ ஆகியோரிடம் வழங்கினார். அவர்கள் மைதானத்தை வலம் வந்தபடி விழா மேடையில் இருந்த பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜோதியை வழங்கினார்கள். அதைப் பெற்றுக்கொண்ட அவர், போட்டி முறைப்படி தொடங்குவதாக அறிவித்தார். வரும் நவம்பர்9-ம் தேதி வரை நடைபெறும் இந்த போட்டிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

முன்னதாக வாள்வீச்சு போட்டிகள் நடைபெற்றது. இதில் மகளிருக்கான சேபர் தனிநபர் போட்டியில் தமிழகத்தின்சி.ஏ.பவானி தேவி இறுதிப் போட்டியில் 15-5 என்ற கணக்கில் கேரளாவின் சவுமியாவை தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றார். கடந்த 2022-ம் ஆண்டுகுஜராத்தில் நடைபெற்றதேசிய விளையாட்டு போட்டியிலும் பவானிதேவி, தங்கம் வென்றிருந்தார்.

## பாரா ஆசிய விளையாட்டு | 82 பதக்கங்கள் வென்று இந்தியா சாதனை




**ஹாங்சோ:** சீனாவின் ஹாங்சோ நகரில் 4-வது பாரா ஆசிய விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இதன் 4-வது நாளான நேற்றைய ஆட்டங்களின் முடிவில் இந்தியா 18 தங்கம், 23 வெள்ளி, 41 வெண்கலம் என 82 பதக்கங்களை குவித்து பதக்கப் பட்டியலில் 8-வது இடம் வகித்தது. பாரா ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா அதிகஅளவிலான பதக்கங்களை வெல்வது இதுவே முதன் முறையாகும்.

இதற்கு முன்னர் இந்தோனேஷியாவில் கடந்த 2018-ம்ஆண்டு நடைபெற்ற தொடரில்அதிகபட்சமாக இந்தியா 72(15 தங்கம், 24 வெள்ளி, 33 வெண்கலம்) பதக்கங்களை வென்றிருந்தது. இம்முறை 2 நாட்கள் போட்டி இன்னும் எஞ்சியுள்ள நிலையில் தற்போது இந்தியா 82 பதக்கங்களை குவித்து வரலாற்று சாதனை நிகழ்த்தி உள்ளது. இந்த பதக்கங்களின் எண்ணிக்கை 100-ஐ எட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹாங்சோ பாரா ஆசிய விளையாட்டு போட்டியின் 4-வது நாளான நேற்று ஆடவருக்கானகுண்டு எறிதலில் எஃப் 46 பிரிவில்இந்தியாவின் சச்சின் சர்ஜேராவ்

கிலாரி 16.03 மீட்டர் தூரம் எறிந்துதங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரரான ரோஹித் குமார் (14.56 மீட்டர்) வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

ஆடவருக்கான துப்பாக்கி சுடுதலில் ஆர் 6 கலப்பு 50 மீட்டர் ரைபிள் புரோன் எஸ்ஹெச் 1 பிரிவில் இந்தியாவின் சித் தார்த்தாபாபு 247.7 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார்.

வில்வித்தையில் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஷீத்தல் தேவி, ராகேஷ் குமார் ஜோடி 151-149 என்ற கணக்கில் சீன அணியை தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றது.

## ஆசிய பாரா விளையாட்டு: தங்கம் வென்றார் தமிழக வீரர்



தர்மராஜ் சோலைராஜ்

**ஹாங்சோ:** ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த நீளம் தாண்டுதல் வீரர் தர்மராஜ் சோலைராஜ் தங்கம் வென்றுள்ளார்.

சீனாவின் ஹாங்சோ நகரில் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்று நடைபெற்ற ஆடவர் நீளம் தாண்டுதல் டி-64 பிரிவில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற தர்மராஜ் சோலைராஜ் 6.80 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். இதன்மூலம் அவர் தங்கப் பதக்கத்தைத் தட்டிச்சென்றார். இதேபிரிவில் இலங்கை வீரர் மத்தக கமாகே 6.68 புள்ளிகளுடன் வெள்ளியும், ஜப்பான் வீரர் மதாயோஷி கோட்டோ 6.35 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனர்.

தங்கம் வென்ற தமிழக வீரர் தர்மராஜ் சோலை ராஜுக்கு, பிரதமர் மோடி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர், இந்திய விளையாட்டு ஆணைய (சாய்) அதிகாரிகள் உள்ளிட்டோர் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

**ஷீத்தல் தேவிக்கு 2 தங்கம்:** வில்வித்தைப் பிரிவில் இந்திய வீராங்கனை ஷீத்தல் தேவி 2 தங்கங்களை வென்றுள்ளார். கடந்த வாரம் காம்பவுண்டு கலப்பு அணிகள் பிரிவில் தங்கமும், மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளியும் ஷீத்தல் தேவி வென்றிருந்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மகளிர் தனிநபர் காம்பவுண்டு பிரிவில் ஷீத்தல் தேவி முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். இதன்மூலம் 2 தங்கம், ஒரு வெள்ளி என 3 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளார் காஷ்மீரைச் சேர்ந்த 16 வயதான ஷீத்தல் தேவி.

**துளசிமதி முருகேசன்:** பாட்மிண்டன் மகளிர் எஸ்யு5 பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் துளசிமதி முருகேன் 21-19, 21-19 எனற செட் கணக்கில் சீனாவின் யாங் ஜியுஜியாவை வென்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். துளசிமதி முருகேசன் தமிழகத்தைச் சேர்ந்தவர். இதே பிரிவில் இந்திய வீராங்கனை மணீஷா ராமதாஸ் வெண்கலம் வென்றார்.